# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1976 - 2016 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2016.07.15

*1976 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1154 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1155 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- சட்ட ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாண அரச சேவையில் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

நீர்கொழும்பு மாநகர சபை

நீர்கொழும்பு மாநகர சபையில் பதவி வெற்றிடமாகவுள்ள சுகாதார தொழிலாளர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் குறித்த தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்திசெய்து "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு" என்ற முகவரிக்கு 2016.08.15 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

| பதவிப் பெயர் | தரம் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|
| சுகாதார தொழிலாளர் | III | 06 | PL-1-2016 ரூபா 24,250-10×250-10×270-10×300-12×330-ரூபா 36,410 | 8ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தி |

**உடல்தகைமைகள்.**- விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் சேவை செய்வதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் தகுந்த உடல், உள நிலையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

**வேறு தகைமைகள்.**- இலங்கைப் பிரசையாகவும் விண்ணப்பம் கோரப்படும் திகதி ஆகும்போது மேல் மாகாணத்தில் 3 வருடங்களாவது நிரந்தரமாக வசித்து வருபவராகவும் இருக்க வேண்டும் என்பதுடன் நல்ல ஒழுக்கமுடையவராக இருக்க வேண்டும்.

**வயதெல்லை.**- விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தல்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு விண்ணப்பதாரி அப்பதவிக்கான தகைமைகள் யாவற்றையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியின்போது 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

**தொழிலின் தன்மை.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.

* நியமனம்பெற்ற 5 வருடங்களுக்குள் 01/2014 ஆம் இலக்க அரச சேவைகள் சுற்று நிருபத்துக்கு அமைய மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
* விதவைகள், அநாதைகள்/விதுரர்கள் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கவேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை.**-

1. **சுகாதார தொழிலாளர்.**- விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் தொடர் அடிப்படையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறைகள் மற்றும் ஒழுக்கக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் :**

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் மேல் மாகாண சபை நிதி நிறுவனக்கோவைக்கும் மேல் மாகாண கௌரவ ஆளுநரால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் நிபந்தனைகள் அல்லது கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் நிறுவனத் தலைவர்களால் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் இணங்கி ஒழுகவேண்டும்.

**மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைகள் மற்றும் ஒழுக்கக்கோவையில் குறித்துரைக்கப் பட்டுள்ள பொருள்கோடல்களுக்கு புறம்பான பொருள்கோடல்கள் :**

மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறைகள் மற்றும் ஒழுக்கக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்கோடல்களுக்கு புறம்பான பொருள்கோடல்கள் எதுவேனும் இருக்குமாயின் அதுபற்றி மேல்மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு/மேல்மாகாண கௌரவ ஆளுநர் ஆராய்ந்து செயற்படுவார்.

மாநகர ஆணையாளர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்கொழும்பு மாநகர சபை**

(அலுவலகத் தேவைக்காக)

*............................................ **பதவிக்கான விண்ணப்பப்படிவம்***

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முழுப்பெயர் :-----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
4. நிரந்தர வதிவிட முகவரி :-----.
5. தபால் முகவரி :-----.
6. நிரந்தரமாக வதியும் மாவட்டம் :-----.
7. நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் பிரிவு :-----.
8. நிரந்தரமாக வதியும் உள்ளூராட்சி நிறுவன அதிகார பிரதேசம் :-----.
9. பிறந்த திகதி :-----.
10. 2016.08.15 ஆந் திகதியின் போது வயது :-----.
11. கல்வித் தகைமைகள் :- (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :-----.
12. வேறு தகைமைகள் :-----.
15. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா என்பது? :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். முன்வைக்கப்படும் ஏதேனும் ஒரு விபரம் பொய்யானதென நியமனம் வழங்கப்படுவதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவராக கருதப்படுவேன் எனவும், நியமனம் வழங்கப்பட்ட பின் அவ்வாறு தெரியவரின் பதவி நீக்கம் செய்வதற்கும் ஆளாவேன் என்பதனையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

7-634

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அம்பலங்கொடை நகர சபை

அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (அனுசங்கித ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) உட்பிரிவில் (ஆ) அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, (261 ஆவது அத்தியாயமாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் (1) ஆவது உட்பரிவின் கீழ் தென்மாகாணத்தில், மாகாணசபை மாகாண நிருவாக விடயபெறுப்பு அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவர்களால் தயாரிக்கப்பட்டதும், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் 1834 ஆம் இலக்க 2013.10.25 ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தலில் IV (அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதுமான தென்மாகாண நகரசபை அதிகாரபிரதேசத்துக்குள் குப்பைகூலங்கள் முகாமைத்துவம் பற்றிய வரைவு இடைக்காலசட்டம் மற்றும் நுளம்புகளும் நோய்களை ஏற்படுத்தும் பூச்சிகளை அழித்து ஒழிப்பதற்கான வரைவு இடைக்காலச் சட்டம், மேற் கூறப்பட்ட மாகாண நிருவாக அலுவலக (அங்கீகரிக்கப்பட்ட இடைகாலச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்ளவும் இவ் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதி

முதல் உரிய ஏற்பாடுகள் அம்பலங்கொடை நகரசபை அதிகார பிரதேசத்துக்குள் செயற்படுத்தவும், 2016.05.02 ஆம் திகதிய தீர்மான இல. 69 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறேன்.

பாரத சமரசேகர,
செயலாளர்,
அம்பலங்கொடை நகரசபை.

நகர சபை அலுவலகம்,
அம்பலங்கொடை,
2016, மே 30.

7-554

---

## திஸ்ஸமஹாராம பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1)ஆவது உபபிரிவின்(261ஆம்அத்தியாயம்)வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2016.05.13 ஆந் திகதி நடாத்தப்பட்ட நிதிக்கொள்கைக் குழுக்கூட்டத்தின்போது தீர்மான இலக்கம் 9 இன் கீழ் பின்வரும் அட்டவணையிலுள்ள தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பலபொத்த ஸாயக்காரகே நிஹால்,
செயலாளர்,
திஸ்ஸமஹாராம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திஸ்ஸமஹாராம,
2016, மே 25.

### அட்டவணை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறைகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டததின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் தென் மாகாண பிரதேச சபையின் உள்ளூராட்சி நிறுவன விடயதான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அவர்களினால் தயார்படுத்தப்பட்டதும் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 2013.10.25 ஆந் திகதி கொண்ட 1834 ஆம் இலக்க வர்த்தமானியின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டதும் தென் மாகாண, மாகாண சபையினால் 2014.08.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாகாணசபைக் கூட்டத்தின்போது அங்கீகரிக்கப்பட்டு 2014.10.17 ஆந் திகதிய 1884/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவித்தலொன்றாக பிரசுரிக்கப்பட்டதுமான நிறைவேற்றுத்துணை விதியான தென் மாகாண பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் திண்மக்கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பான நிறைவேற்றுத் துணை விதி மற்றும் நுளம்பு உட்பட நோய்த்தொற்றுக் கிருமிகள் அழித்தொழித்திடல் தொடர்பான நிறைறேற்றுத் துணை விதியை திஸ்ஸமஹாராம பிரதேச சபையினால் 2016.06.01 ஆந் திகதியிலிருந்து அங்கீகரித்து ஏற்று திஸ்ஸமஹாராம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயலாற்றிட வேண்டுமென மேற்குறிப்பிடப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் திஸ்ஸ மஹாராம பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கனிறது.

7-564

---

## கொலொன்ன பிரதேச சபை

பாதை பெயரிடுதல்

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலகப் பிரிவில் பொத்தன கிராம அலுவலர் பிரிவில் இம்புல்ஹிட்டித்தென்ன கிராமத்துக்குக் குறுக்கே பிட்டகந்த வரை வியாபித்துள்ள 1/2 கி.மீ. அளவிலான பாதை "அல்விஸ் மாவத்தை" என்று பெயரிடுவதற்கு, கௌரவ சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் மஹீபால ஹேரத் அவர்களால் அனுமதிக்கப்பட்டதாகவும் அதற்கேற்ப 2016.06.13 ஆந் திகதி முதல் மேற்குறிப்பிடப்பட்ட பாதைப்பகுதி "அல்விஸ் மாவத்தை" என்று பெயரிடுவது பொருத்தமானதாகுமென்று கொலொன்ன பிரதேச சபையின் தீர்மான இலக்கம் 345 இன் கீழ் தீர்மானிப்பதாக பொதுமக்கள் அறிந்தகொள்ளும் பொருட்டு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

கே. வீ. பீ. ஐராங்கனீ,
செயலாளரும் சபையின் அதிகாரிகள் மற்றும்
கடமைசெய்பணி அதிகாரி,
கொலொன்ன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொலொன்ன,
2016, யூன் 13.

7-565

**கம்பஹா மாநகர சபை**

*நிகழ்ச்சி வரவு செலவுத்திட்டம் - 2016*

*கம்பஹா மாநகர சபையில் 2016.06.30 ஆந் திகதி நடை பெறவுள்ள பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான உத்தேச வருமானம் மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள் அடங்கிய நிகழ்ச்சி வரவு செலவுத் திட்டம் 2016.06.25 ஆந் திகதி முதல் 7 நாட்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214-(1) இன் கீழ் அறியத்தருகின்றேன்.*

*எரங்க சேனாநாயக,*
*நகர பிதா,*
*கம்பஹா மாநகர சபை.*

*2016, யூன் 24.*

*7-580*

---

**கல்கமுவ பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீரமானிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இல்க்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கல்கமுவ பிரதேச சபையின் செயலாளர் ஏ. பீ. நிமல் ரத்நாயக்க ஆகிய நான் பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை கல்கமுவ பிரதேச சபைக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 2016.03.23 ஆந் திகதிய 1818 தீர்மான இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் நான் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*ஏ. பீ. நிமல் ரத்நாயக்க,*
*செயலாளர் மற்றும் செயல்கள்,*
*கடமைகளை நிறைவேற்றுகின்ற*
*உத்தியோகத்தர்,*
*கல்கமுவ பிரதேச சபை.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டதின் (2) ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2015.09.25 ஆந் திகதிய 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் வெளிடப்பட்டதும் பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு களுக்கமைய கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவுப்படி நான் தீர்மானிக்கின்றேன்.*

*7-600*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.